ஆகியோர் தங்களுடைய கோரிக்கையை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தால், நிச்சயமாக அவர் பரிசீலனை செய்வார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

107—

தேர்வு மையம்

***5316—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, பாரூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பர்கூர் தொகுதி, பாரூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மார்ச் 2012–ல் மேல்நிலைத் தேர்வுக்குப் புதிய தேர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய மையத்தில் தற்போது 364 மாணவர்கள் தேர்வு எழுதியுள்ளார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், பச்சைபெருமாள்பட்டியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பிற்கான தேர்வு மையம் இல்லை. அங்குள்ள மாணவர்கள் முசிறி தொகுதியிலுள்ள மேட்டுப்பாளையம் ஆண்கள்

மேல்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டியுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சியில் 2001 ஆம் ஆண்டு இந்தப் பள்ளி தரம் உயர்த்தப்பட்டது. அந்தப் பள்ளிக்கு பச்சைமலைவாழ் மாணவர்கள் அதிகமாகச் செல்கிறார்கள். எனவே, அந்தப் பள்ளிக்கு 12 ஆம் வகுப்பிற்கான தேர்வு மையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 ஆம் வகுப்புத் தேர்வு மையம் அமைக்க வேண்டுமென்றால், கிராமப் பள்ளியாக இருந்தால், அதில் இருபாலரும் சேர்ந்து குறைந்தபட்சம் 125 மாணவ, மாணவிகள் பயில வேண்டும். ஏற்கெனவே அப்பள்ளி 10 ஆம் வகுப்புத் தேர்வு மையமாகச் செயல்பட வேண்டும். இவ்விரண்டு நிபந்தனைகளின்கீழ் மட்டுமே புதிய தேர்வு மையம் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள் தன்னுடைய தொகுதியில் தேர்வு மையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மேற்கூறிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, 125 பேருக்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் இருந்தால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு வருகின்ற கல்வியாண்டில் இதுகுறித்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது பூம்புகார் தொகுதியில் சங்கரன்பந்தல் அரசு மேல்நிலைப் பள்ளியில் +2 வகுப்புத் தேர்வு மையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2012 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு இதே கேள்வியைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்களும் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தனது தொகுதியில் ஒரு தேர்வு மையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கல்வித் துறையைப் பொறுத்தவரையில், 125 மாணவ, மாணவிகள் இருந்து, அங்கு ஏற்கெனவே 10–ஆம் வகுப்புத் தேர்வு எழுதுகின்ற வாய்ப்பும் இருந்தால், அந்தப் பகுதிக்குத் தேர்வு மையம் வழங்குவது என்பது அரசின் கொள்கையாகும். அதன் அடிப்படையில், இப்பொழுது படிப்படியாகத் தேர்வு மையங்களை வழங்கிக் கொண்டு வருகிறோம். வருகின்ற கல்வியாண்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பள்ளிக்கும் தேர்வு மையம் வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலையில் மலைவாழ் கிராமமான நெல்லிவாசல்நாடு பள்ளியில் ஒரு தேர்வு மையம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். 15 கிலோ மீட்டர் தூரம் செல்லுகின்ற அந்த மலைவாழ் மாணவ, மாணவிகளின் நலனைக் கருதி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு தேர்வு மையம் அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 ஏப்ரல் 17

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரும் அதே கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார். ஆனால், அவர் குறிப்பிட்ட பள்ளியில் எத்தனை மாணவ, மாணவிகள் இருக்கிறார்கள் என்று அவர் தெரிவிக்கவில்லை. அதே நேரத்தில், பழங்குடியின மாணவ, மாணவிகள் மலைப் பகுதியிலிருந்து 15 கிலோ மீட்டர் வர வேண்டுமென்ற ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பழங்குடியினர் மற்றும் மலைவாழ் மக்கள் அவர்கள் வசிக்கின்ற பகுதிக்கு அருகிலேயே தேர்வு எழுத வேண்டுமென்று ஆணை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற அந்தப் பள்ளிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் இருக்கின்றனவா என்பதை ஆய்வு செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வருகின்ற கல்வியாண்டில் தேர்வு மையம் அமைப்பது குறித்துப் பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட ஒரேமாதிரி கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். எனவே, நீங்களும் அதே மாதிரி கேள்வியைக் கேட்காமல் வேறு கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும், குறிப்பாக மலைப் பகுதியில் இருக்கக்கூடிய பள்ளிகளில் 60 மாணவ, மாணவிகள் மட்டுமே +2 பயில்கிறார்கள். எனது தொகுதியில் அவர்கள் சிட்லிங்கிலிருந்து கோட்டப்பட்டி, தீர்த்தமலையிலுள்ள தேர்வு மையத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், 27 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அந்தப் பகுதி போக்குவரத்து வசதி இல்லாத பகுதி. இன்னும் சொல்லப்போனால் முந்தைய நாளே செல்ல வேண்டிய அவல நிலை இருந்து கொண்டிருக்கின்றது. இந்த அரசு, மலைப் பகுதிகளிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 50 மாணவர்கள் படித்தாலே, தேர்வு மையம் வழங்கலாமென்று ஏற்கெனவே அனுமதி வழங்கியிருந்தது. எனவே, 50 மாணவர்கள், 70 மாணவர்கள் தமிழகம் முழுவதும் மலைப் பகுதிகளிலுள்ள பள்ளிகளில் படித்தாலே தேர்வு மையம் அமைப்பதை நடைமுறைப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

2012 ஏப்ரல் 17]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரும் இதே கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார். இதை வருகின்ற நிதியாண்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் (குறுக்கீடு) இருக்கையில் இல்லையா? மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.

டாக்டர் ச. துரையப்பா: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள் மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வியைக் கேட்டுள்ளார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினரின் கேள்வியும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதிலும் அவைக் குறிப்பில் இருக்காது. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம் அவர்கள்.

திரு. எஸ்.கே. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரபாண்டி தொகுதிக்குட்பட்ட பனமரத்துப்பட்டி ஒன்றியப் பகுதியில், முழுவதும் கிராமப் பகுதியாக இருக்கின்ற நெய்க்காரப்பட்டி ஊராட்சியில் இருக்கின்ற உயர் நிலைப் பள்ளியை இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பள்ளியைத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதற்குத் தனிக் கேள்வி போட்டால்தான் உரிய பதில் அளிக்க இயலும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

108—

நூலகம் மற்றும் சுற்றுச் சுவர்

***5729—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியிலுள்ள சுப்பிரமணிய சிவா நினைவு மண்டபத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டவும், நூலகம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை தங்கள் அனுமதியுடன் அளிக்கிறேன்.

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள தியாகி சுப்பிரமணிய சிவா நினைவு மண்டபத்தில் நூலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், அந்நினைவு மண்டபத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டுதல் தொடர்பான கருத்துரு பற்றி திட்ட மதிப்பீடுகள் பெற்று பரிசீலிக்கப்படும்.